சிவகாசி நகர்மன்றம்
அவசரக் கூட்டம்

நகராட்சி அலுவலகம்.

அவசரக்கூட்டம் எண் . **நாள் : 30.12.2020.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2049 சார்வரி வருடம் மார்கழி திங்கள் 15 ஆம் நாள் 2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ம் தேதி திங்கள்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : திரு. ப.கிருஷ்ணமூர்த்தி,எம்.ஏ.,எம்.பில்.,
தனி அலுவலர்.

பொருள் :

1. இந்நகராட்சி பகுதிகுட்பட்ட குடிநீர் அல்லாத பிறபயன்பாட்டிற்கு வார்டு 17 முதல் 33 வரை 264 எண்ணம் சிறுமின்விசை பம்புகள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. நகர் பகுதியில் ஆண்டுதோறும் வறட்சி நிலை ஏற்படுவதால் அந்த காலங்களில் தண்ணீர் தட்டுப்பாடடை சமாளிக்க சிறுமின்விசைப் பம்புகள் அனைத்தும் தினந்தோறும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனை சரிசெய்து இயக்கும் பணிக்கு ரூ.9,00,000/- (ஒன்பது இலட்சம் மட்டும்) ஆகும். மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-1029, நாள்-29.10.2020படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் பொருட்டு மேற்கண்ட பணிக்கு 10.12.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	ஒப்பந்ததாரரின் பெயர்	விலை விகிதம்
1.	திரு.எஸ்.பாண்டிமுருகன்	மதிப்பீட்டை விட 1.44% குறைவு
2.	ஸ்ரீபழநி கன்ஸ்ட்ரக்சன்	மதிப்பீட்டை விட 4.38% அதிகம்

அலுவலகக் குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு.எஸ்.பாண்டிமுருகன் என்பவர் மதிப்பீட்டினைவிட 1.44% குறைவாக தந்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் செய்யவும் மன்ற அனுமதிக்கலாம். குடிநீர் விநியோகம் அத்தியாவசியம் கருதி முன் அனுமதி வழங்கப்படுகிறது.

ந.க.எண்:4761/2020/இ2
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1051

2. இந்நகராட்சி பகுதிகுட்பட்ட குடிநீர் அல்லாத பிறபயன்பாட்டிற்கு வார்டு 1 முதல் 16 வரை 226 எண்ணம் சிறுமின்விசை பம்புகள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. நகர் பகுதியில் ஆண்டுதோறும் வறட்சி நிலை ஏற்படுவதால் அந்த காலங்களில் தண்ணீர் தட்டுப்பாடடை சமாளிக்க சிறுமின்விசைப் பம்புகள் அனைத்தும் தினந்தோறும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனை சரிசெய்து இயக்கும் பணிக்கு ரூ.7,00,000/- (ஏழு இலட்சம் மட்டும்) ஆகும். மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-1030,நாள்-29.10.2020படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் பொருட்டு மேற்கண்ட பணிக்கு 10.12.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	ஒப்பந்ததாரரின் பெயர்	விலை விகிதம்
1.	திரு.எஸ்.பாண்டிமுருகன்	மதிப்பீட்டை விட 1.29% குறைவு
2.	ஸ்ரீபழநி கன்ஸ்ட்ரக்சன்	மதிப்பீட்டை விட 0.53% அதிகம்

அலுவலகக் குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு.எஸ்.பாண்டிமுருகன் என்பவர் மதிப்பீட்டினைவிட 1.29% குறைவாக தந்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் செய்யவும் மன்ற அனுமதிக்கலாம். குடிநீர் பணியின் விநியோகம் அத்தியாவசியம் கருதி முன் அனுமதி வழங்கப்படுகிறது.

ந.க.எண்:4760/2020/இ2

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1052

3. இந்நகராட்சி பகுதியினுள் செயல்படும் முடி திருத்தகம், அழகு நிலையம் , ஸ்பா மற்றும் மசாஜ் நிலையங்கள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 , பிரிவு 249ன் பட்டியல் ஏ ல் சட்டத்திருத்தத்தின் படி நகராடசிகளிடமிருந்து உரிமம் பெற அறிவுறுத்தி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் அறிவிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.40,000/-க்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 6151 / 2020 / எச்1)

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1053

4. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் TN-95 C 1816 TATA ACE வாகனத்திற்கு பழுது பணிகளை நீக்கம் செய்து மற்றும் தேவையான உதிரி பாகங்களை மாற்றி சரி செய்யும் பணிக்கு தொகை ரூ.35,000/-க்கு(ரூபாய். முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) இந்நகர்மன்ற தீர்மான எண் 1041 நாள்: 30.11.2020-ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 16.12.2020 தேதி ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	விபரம்	தொகை. ரூ.
1.	வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ் 3/1396-A, சாத்தூர் ரோடு, சிவகாசி	35500/-
2.	நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்தூர் ரோடு, சிவகாசி.	34 500/-

வரப்பெற்ற 2 (இரண்டு) ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் தந்துள்ள வரிசை எண்-2ல் உள்ள நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்தூர் ரோடு, சிவகாசி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.5605 /2020/எச்2
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1054

5. சிவகாசி நகராட்சியில், **வருவாய் நிதியில் வார்டு எண்.26 மணிக்கட்டி ஊரணி கிழக்கு பக்கம் சுகாதார வளாகம் கட்டும் பணிக்குரிய 14.02.2018ம் தேதிய பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டு பட்டியல் தொகையில்** 5 % காப்பு வைப்புத் தொகை ரூ.21605/- திரு.V.முருகேசன் ஒப்பந்ததாரர் பெயரில் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு-2020-2021-வால்யூம்-I பக்கம் எண்.11 வரிசை எண்.76ல் கீழ்க்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வைப்புத் தொகை ரூ.21605/- ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்	காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 4016 RF	பணியின் பெயர்	காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு ஆண்டு	காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண்	காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பதிவேட்டின் வரிசை எண்	தொகை ரூ.
1	2020-2021 வால்யூம் - I 4016 RF	வார்டு எண்.26 மணிக்கட்டி ஊரணி கிழக்கு பக்கம் சுகாதார வளாகம் கட்டும் பணி	2020-2021	11	76	21605
					மொத்தம்	**21605**

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்

ந.க.எண். 2629/2019/பி4
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1055

6. அரசு ஆணை எண்.170, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் (ம.அதி.3) துறை, நாள்.27.10.2020ன் படி இந்நகராட்சி பகுதியில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழைகளின் 7275 குடும்பங்களுக்கு இவ்லுவலக உத்திரவு ந.க.எண்.3918/2020/எச்1, நாள்.23.11.2020ன் படி புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிறப்பு நிதியுதவி வழங்குவதற்கு ஏதுவாக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை சேகரிப்பதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.15/- வீதம் செலவு என்ற அடிப்படையில் (படிவம் அச்சிடுதல் (PrePopulated Form ரூ.5/-, தகவல் சேகரிப்பு பணிக்கு ரூ.5/-, தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் பணி ரூ.5/- ஆகிய பணிகளுக்கு செலவு செய்ய அரசு ஆணையில் அனுமதி அளித்துள்ளது. அதன்படி விவரங்கள் குறித்து கணக்கெடுப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளுவதற்கும், படிவங்கள் அச்சிடுதல், கணக்கெடுப்பு பணி செய்தல் மற்றும் கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை மேற்கொள்ள செலவுக்கு தற்போது உடனடியாக அரசிடமிருந்து பணம் வரவில்லை. ஆகையால் தற்போது பொது நிதியிலிருந்து செலவு செய்து கொண்டு அரசிடமிருந்து பணம் ஒதுக்கீடு செய்யப்படும் பட்சத்தில் பொதுநிதியில் வரவு வைத்து கொள்வதற்கும்

அவசர அவசியம் கருதி திரு.A.அபுபக்கர் சித்திக், சுகாதார ஆய்வாளருக்கு ரூ.1,50,000/-யை முன்பணமாக பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற முன்அமைதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மனறம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 5601/2020/பி4

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1056

7. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் TN-95 C 1804 TATA ACE வாகனத்திற்கு பழுது பணிகளை நீக்கம் செய்து மற்றும் தேவையான உதிரி பாகங்களை மாற்றி சரி செய்யும் பணிக்கு தொகை ரூ.10,000/-க்கு (ரூபாய். பத்தாயிரம் மட்டும்) இந்நகர்மன்ற தீர்மான எண் 1042 நாள்: 30.11.2020-ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 16.12.2020 தேதி ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	விபரம்	தொகை. ரூ.
1.	வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ் 3/1396-A, சாத்தூர் ரோடு, சிவகாசி	9,950/-
2.	நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்தூர் ரோடு, சிவகாசி.	9,750/-

வரப்பெற்ற 2 (இரண்டு) ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் தந்துள்ள வரிசை எண்-2ல் உள்ள நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்தூர் ரோடு, சிவகாசி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.5316 /2020/எச்2

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1057

தனி அலுவலர்,
சிவகாசி நகர்மன்றம்.